# தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி

அரசு அங்கீகார எண் : 337/98 நாள் : 04–09–1998

பதிவு எண் 197/1977

தலைவர் : செ.முத்துசாமி, Ex. MLC

3/28, பிளாக்கர்ஸ் சாலை, செ.முத்துசாமி அரங்கம்,

சென்னை – 600 002. website : www.tntf.in

E-mail.:-vsmuthusamynkl@yahoo.com, taakootanai@gmail.com





| | | |
|---|---|---|
| செ.முத்துசாமி, Ex.MLC. | சு.ம.பாலகிருஷ்ணன். | கே.பி.ரக்ஷித். |
| மாநிலத்தலைவர். | பொதுச்செயலாளர் (பொ). | மாநிலப்பொருளாளர். |
| 94441 76288 | 94435 67738 | 7010617389 |


நாமக்கல்

12-09-2020

பெறுநர்,

மாண்புமிகு முதல்வர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு
தலைமைச்செயலகம்,
செயிண்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-600009

மதிப்பிற்குரிய அய்யா,

| | |
|---|---|
| பொருள்:- | **கடந்த 2019 ஜனவரி மாதம் நடைபெற்ற ஜாக்டோ ஜியோ போராட்டத்தின் போது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளை வரும் சட்டமன்றக்கூட்டத்தொடரிலேயே ரத்துசெய்து அறிவிப்பு வெளியிடக்கோரிக்கை** |

2003 இல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் இணைந்து மாபெரும் போராட்டம் நடந்தது அப்போதைய தமிழக முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கடுஞ்சினம் கொண்டு ஒரே நாளில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் அரசுஊழியர் ஆசிரியர்களை டிஸ்மிஸ் செய்தார். அதனுடன் பலர் சிறையில் அடைக்கப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டு பாதிப்புக்கு உள்ளானார்கள். அதன்பின் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் வேலைக்கு சேர்ந்தனர். அப்போது சங்கங்களின் அங்கீகாரங்கள் ரத்து செய்யப்பட்டதுடன் சலுகைகளும் பறிக்கப்பட்டன. அதன்பின் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40 பாராளுமன்ற தொகுதிகளிலும் அம்மா தலைமையிலான அரசு தோல்வி அடைந்தது.அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது கொடுஞ்சினம் கொண்ட அம்மா அவர்கள் கடிதோச்சி மெல்ல எறிக என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கு இணங்க யாரும் கோரிக்கை வைக்காமலேயே எல்லா சங்கங்களையும் மீண்டும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்பொழுது நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் இனி நடப்பவை நல்லவையாக நடக்கட்டும் எனக்கூறி அனைத்து சங்க தலைவர்களையும் 3 நிமிடங்கள் பேச அனுமதி அளித்து பேச அழைத்தார். அப்போது தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி சார்பில் நமது பொதுச்செயலர் செ.முத்துசாமி Ex.MLC அவர்கள் 11 நிமிடங்கள் எந்த வித தடையுமின்றி பேசியது நினைவில் உள்ளது. அதன்பின் அன்று மாலையே பறிக்கப்பட்ட சலுகைகளை திரும்ப வழங்கியதுடன் ரத்து

செய்யப்பட்ட சங்கங்களின் அங்கீகாரங்களை திரும்பி வழங்கினார் அதன்பின் அவர் மீதான மதிப்பு தமிழக அரசு ஊழியர் ஆசிரியர்கள் மத்தியில் உயர்ந்தது .

அதுபோல கடந்த 2019 ஜனவரியில் நடைபெற்ற ஜாக்டோ ஜியோ போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது தற்போதைய முதல்வர் எடப்பாடி அரசு 17பி குற்ற குறிப்பானை கைது வழக்கு பதிந்து நடவடிக்கை பணி மாறுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தீர்க்கப்படாமல் உள்ளது.முந்தைய காலம் போன்று நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலிலும் 39 தொகுதிகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தற்பொழுதும் இழந்துள்ளது

**எனவே அம்மா வழியில் ஆட்சி செய்யும் முதல்வர் மாண்புமிகு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் அவர் வழியிலேயே 2019 ஜனவரியில் நடைபெற்ற ஜாக்டோ - ஜியோ போராட்டத்தில் பங்கேற்ற அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் 17எ . 17பி குற்றக்குறிப்பாணைகள், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஆண்டு ஊதிய உயர்வுகள், பதவி உயர்வு கள், முன்னுரிமைப் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமை , மாறுதல்கள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு முற்றாக கைவிடுவதை நடைபெற உள்ள சட்டமன்ற கூட்டத்தொடரிலேயே அறிவிக்க வேண்டும் என தமிழக முதல்வர் அவர்களை தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி கேட்டுக்கொள்கிறது .**

**மேலும் இந்நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் அரசு ஊழியர்களிடையே அவரது மதிப்பு உயர்வடையும் என தெரிவித்துக்கொள்கிறது.**

.தங்கள் உண்மையுள்ள,

| கே.பி.ரக்ஷித் | சு.ம பாலகிருஷ்னன் | செ.முத்துசாமி Ex MLC |
|---|---|---|
| மாநிலபொருளாளர் | பொதுசெயலாளர் (பொ ) | மாநிலத்தலைவர் |

**நகல்**

- **மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்**
  **தலைமைச்செயலகம், சென்னை-9**

- **மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அவர்கள்**
  **தலைமைச்செயலகம், சென்னை-9**

- **உயர்திரு சி பொன்னையன் அவர்கள்,**
  **தமிழக அரசின் திட்டக் கமிஷன் துணைத் தலைவர்,**
  **எழிலகம்,சென்னை**